## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/ முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு – 2013/2014

## HY 2163 Laws and Customs of Sri Lankan Tamils

ரம் : 03 மணித்தியாலங்கள்

வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டது. இவ்விரு பகுதிகளிலும் இவ்விரு னாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

---

### பகுதி –I

01. வரலாற்றாதாரங்களின் அடிப்படையில் இலங்கையில் தமிழரின் பூர்வீகம் பற்றி ஆராய்க. (25 புள்ளி)

02. முக்குவர் சட்டக்கோவை குறிப்பிடுகின்ற சொத்துடைமைகளின் வகைப்பாடுகளைக் குறிப்பிட்டு, கணவனும் மனைவியும் மரணித்த பின் சொத்துக்கள் எவ்வாறு பங்கீடு செய்யப்படும் என்பது பற்றி விளக்குக. (25 புள்ளி)

03. தேசவழமைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஆதனப் பங்கீடு தொடர்பான விடயங்களை ஆராய்க. (25 புள்ளி)

### பகுதி II

04. திருகோணமலைத் தமிழரின் பிரதான சமூக வழமைகளை விபரிக்குக. (25 புள்ளி)

05. மட்டக்களப்பு கோயில்களிற் பின்பற்றப்படுகின்ற விசேட நடைமுறைகளை விளக்குக. (25 புள்ளி)

06. மேல்வருவனவற்றுள் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

அ) தேசவழமைச் சட்டத்தில் முதுசொம்

ஆ) தேசவழமைச் சட்டத்திற் சிறைகள்

இ) முக்குவரின் வேளாண்மை மரபுகள் (12.5x2 புள்ளி)

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
# கலை கலாசார பீடம், புவியியற்றுறை
## இரண்டாம் வருடம் முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
## 2013/2014 (March/ April 2016)

| GYS 2113: படவரைகலையும் நிலஅளவை நுட்பங்களும் (Cartography and Surveying Techniques) | நேரம் 04 மணித்தியாலங்கள் |
|---|---|

- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒவ்வொரு வினாவைத் தெரிவு செய்து எல்லாமாக **நான்கு** (04) வினாக்களுக்கு விடை தருக.
- எழுத்துக்கள், படங்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
- மெற்றிக் இடவிளக்கப்படம், படிவுத்தாள், வரைபுத்தாள், வரைதல்தாள், விமான ஒளிப்படம், இலங்கை இந்திய வானிலைப் புறவுருவப் படம் என்பன வழங்கப்படும்
- இடவிளக்கப் படம் விமான ஒளிப்படம் ஆகியன பரீட்சை மேற்பார்வையாளரிடம் மீளக் கையளிக்கப்படல் வேண்டும்.

### பகுதி - I

1) தரப்பட்டுள்ள இடவிளக்கப் படத்தில் வடகிழக்கு மூலையில் வடக்குத் தெற்காக 9 சென்ரிமீற்றர் தூரமும் கிழக்கு மேற்காக 7 சென்ரிமீற்றர் தூரமும் கொண்ட பிரதேசத்தினை ஒரு சதுர சென்ரிமீற்றர் நெய்யரி வலையமைப்புக் கொண்ட சதுரங்களாகப் பிரித்து ஒழுங்குமுறை மாதிரி நுட்பத்தினூடாக 21 சதுரங்களைத் தேர்ந்தெடுத்து அப் பிரதேசத்தின் நிலப்பயன்பாட்டு பாங்கு பற்றி விபரிக்குக.

*(25 புள்ளிகள்)*

2) வலைப்பின்னல் ஆய்வு நுட்பங்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிக்குக.

அ. உரு-1 இல் தரப்பட்டுள்ள நதி வலைப்பின்னல் பிரதேசத்தின் பரப்பளவு 68 சதுரக் கிலோ மீற்றர்களாகும். அப்பிரதேசத்துக்கான வடிநில அடர்த்தியினைக் காண்பதுடன், கிடைக்கப்பெற்ற பெறுமானத்தின் அடிப்படையில் அப்பிரதேசம் பற்றிய உமது கருத்தினைத் தருக.

*(15 புள்ளிகள்)*

ஆ. உரு-2 இல் காட்டப்பட்டுள்ள வீதி வலைப்பின்னலிற்கு தாய அட்டவணை ஒன்றினைத் தயாரித்து, குறுகிய பாதையினால் இணைக்கப்பட்டுள்ள மையம் யாதெனக் கண்டறிக.

*(10 புள்ளிகள்)*

### பகுதி - II

3) அட்டவணை இல.-01 இல் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி இலங்கை இந்திய பொதுப் பார்வை வானிலை அவதானிப்பு நிலையங்களைக் கொண்ட புறவரிப்படத்தில் விடையளிக்குக.

அ. பொருத்தமான வானிலை மூலக் கூறுகளுக்கான அடையாளங்களை உரிய நிலையங்களில் சரியான ஒழுங்கில் குறித்துக் காட்டுக.

*(12 புள்ளிகள்)*

ஆ. 2 மில்லிபார் இடைவெளியில் சம அமுக்கக் கோடுகளை வரைக.
(08 புள்ளிகள்)

இ. இப்பிரதேசத்தின் வானிலைத் தன்மை பற்றி குறிப்புரை தருக.
(05 புள்ளிகள்)

4) அ. விமான ஒளிப்படங்களில் புவிமேற்பரப்பு அமசங்கள் பிரதிபலிக்கப்படும் பாங்கு குறித்து தகுந்த உதாரணங்களை முன்வைத்து கருத்துரைக்குக.
(15 புள்ளிகள்)

ஆ. விமான ஒளிப்படங்களின் அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் தருக.
(10 புள்ளிகள்)


## பகுதி – III

5) அ. நில அளவையியலின் அடிப்படைக் கோட்பாடுகளைத் தந்து. அவற்றினைச் சுருக்கமாக விபரிக்குக.
(15 புள்ளிகள்)

ஆ. தள அளவீட்டையும், புவிபார்த்து அளவீட்டையும் ஒப்பிட்டு சுருக்கமாக விளக்குக.
(10 புள்ளிகள்)


6) வடமேற்குத் திசைவழியே உள்ள ஒரு நிலஅளவைக் கோட்டின் நீளம் 65.43 மீற்றர்கள் ஆகும். நிலஅளவைக் கோட்டின் வழியே முறையே 10.5 மீற்றர். 25.6 மீற்றர், 60.4 மீற்றர் நீளங்களிலுள்ள வேம்பு மரங்களுக்கான எதிரமைப்புக்கள் முறையே 1.10 மீற்றர் வலப்பக்கமாக, 2.15 மீற்றர் இடப்பக்கமாக, மற்றும் 2.45 மீற்றர் வலப்பக்கமாகவும் இருந்தது. இவ்வாசிப்புக்களை ஒரு புலக்குறிப்புப் புத்தகத்தின் ஒரு பக்கத்தில் குறித்துக் காட்டுக.
(25 புள்ளிகள்)

உரு-01:



1:100000


உரு-02:



# Eastern University, Sri Lanka

## INDO - SRI LANKA SYNOPTIC WEATHER MAP

Index No: [ ][ ] [ ][ ][ ][ ]



அட்டவணை இல.01:
இந்திய இலங்கை பொதுப்பார்வை வானிலைத் தரவுகள்

| நிலைய எண் | அமுக்கம் (mb) | பாரமானிப் போக்கு (mb) | வெப்ப நிலை ($^0C$) | முகில்கள் | | | | காற்று | | வானிலை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | மொத்த முகிலளவு | தாழ் முகில் (CL) | இடை முகில் (CM) | உயர் முகில் (CH) | திசை | வேகம் (Knots) | தற்போதைய வானிலை (Pr.w) | கடந்த வானிலை (Pt.w) |
| 003 | 992 | 05 | 25 | 8 | cu | As | - | S | 35 | மழை | மழை |
| 014 | 996 | 06 | 25 | 8 | cb | As | Ci | S | 40 | தூறல் | - |
| 109 | 1006 | 01 | 30 | 2 | cb | Ac | Ci | W | 10 | - | தூறல் |
| 128 | 999 | 03 | 26 | 6 | cu | Ac | Ci | ENE | 30 | மழை | மழை |
| 149 | 1004 | 02 | 30 | 2 | cu | - | Ci | E | 15 | - | மழை |
| 194 | 996 | 04 | 24 | 7 | cb | As | - | SE | 30 | மழை | - |
| 237 | 1000 | 03 | 27 | 4 | cb | As | - | WNW | 30 | மழை | தூறல் |
| 262 | 1006 | 01 | 30 | 4 | cu | - | Ci | W | 10 | தூறல் | மழை |
| 279 | 1003 | 02 | 28 | 2 | cu | Ac | Ci | SW | 20 | - | தூறல் |
| 284 | 1000 | 03 | 27 | 6 | cb | - | - | NE | 25 | மழை | தூறல் |
| 295 | 1001 | 02 | 28 | 4 | cb | Ac | Ci | NNW | 20 | மழை | |
| 333 | 1008 | 06 | 29 | 4 | cu | - | - | SE | 10 | - | - |
| 339 | 1002 | 02 | 28 | 2 | cu | As | Ci | W | 20 | தூறல் | - |
| 344 | 1003 | 03 | 26 | 6 | cu | As | Ci | SW | 15 | மழை | தூறல் |
| 369 | 1002 | 02 | 30 | 2 | cb | - | Ci | NW | 15 | - | தூறல் |
| 371 | 1002 | 03 | 30 | 2 | cb | Ac | Ci | W | 20 | மழை | |
| 418 | 1004 | 03 | 29 | 2 | cu | - | Ci | W | 10 | தூறல் | தூறல் |
| 466 | 1004 | 02 | 28 | 2 | cu | Ac | Ci | SW | 10 | தூறல் | - |
| 647 | 996 | 01 | 27 | 3 | cu | As | - | NW | 20 | - | மழை |
| 781 | 1000 | 02 | 26 | 6 | cu | - | Ci | SE | 05 | மழை | - |